# தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

**கே.வீ. தங்கபாலு**
தலைவர்

தேதி : 25-10-2011

பத்திரிகைச் செய்தி :

## *தலைவர் திரு. கே.வீ. தங்கபாலு அவர்களின் தீபாவளித் திருநாள் வாழ்த்து*

தீபாவளித் திருநாளான தீபத் திருவிழா இன்று நாடெங்கும் மகிழ்ச்சியோடு கொண்டாடப்படுகிறது.

மனித சமுதாயத்தில் ஆணவமும், அகங்காரமும் ஒழிய வேண்டும். ஆனந்தமும், சாந்தமும் நிலவ வேண்டும் என்பதை வலியுறுத்தும் பண்டிகை தீபாவளி.

கொடுமையும், தீமையும் நிறைந்த நெஞ்சத்தில் ஈவு இரக்கமின்றி எளிய மக்களை துன்புறுத்தி வந்த நரகாசுரன் வதம் செய்யப்பட்டு கொன்று அழிக்கப்பட்டான் என்பது புராண வரலாறு. அதன்மூலம் மனிதருள் கெடுமதியாளர்க்கு தக்க பாடம் புகட்ட ஆண்டுதோறும் கொண்டாடப்படும் பண்டிகை இது.

இந்தியத் திருநாடு முழுவதும் அனைத்து மொழி, சாதி, இனப் பிரிவு மக்களும் ஒருசேர இணைந்து மகிழ்ச்சியோடு ஒருநாளில் கொண்டாடும் ஒரே திருவிழா இது என்பதும் இப்பெருநாளின் சிறப்பு.

இந்நன்னாளில் பட்டாசு ஒலியிலும், மத்தாப்பு ஒளியிலும் சிரித்து குதூகலிக்கும் குழந்தைச் செல்வங்கள் போல எதிர்காலத்திலும் நமது நாடு மேன்மேலும் வலிவும், பொலிவும் பெற்று ஒளிர்ந்திட, வன்முறை, வறுமை நீங்கி மதநல்லிணக்கமும், செழுமையும் மேம்பட்டிட தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாட்டுணர்வுடன் ஒன்றிணைந்து இனிதாய் உயர்வோம் என உறுதியேற்போம்.

தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் அனைத்து மக்களுக்கும் அன்பான எனது தீபாவளித் திருநாள் நல்வாழ்த்துக்கள்.

(கே.வீ. தங்கபாலு)

"சத்தியமூர்த்தி பவன்" 40, திரு.வி.க. சாலை, சென்னை - 600 002
போன் : 28603945, 28601949, பேக்ஸ் : 28604243